# நந்தம்பாக்கம் பேரூராட்சி
## காஞ்சிபுரம் மாவட்டம்

<u>ந.க.எண்.155/2010</u> <u>நாள்.10.05.2010</u>

**1998ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்**
**(தமிழ்நாடு சட்டம் 43/1998–ன் கீழ் அறிவிக்கப்படும்)**

## <u>மிக குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

நந்தம்பாக்கம் பேரூராட்சிக்காகவும் அதன் சார்பாகவும் கீழ்கண்ட விவரப்படி2010–11ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பணிகள் செய்ய மூடி முத்திரை இடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து **18.05.2010**ம் நாள் செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிக்கான உறைகள் திறக்கப்படும். பணி சம்மந்தமான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பேரூராட்சி அலுவலகத்தில் 17.05.2010-ம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 3.00 மணிவரை உரிய தொகையை ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பணி சம்மந்தமான இதர விவரங்கள் அனைத்தும் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம், முன் வைப்புத் தொகையினை 17.05.2010-ம் நாள் பிற்பகல் 3.00 மணிக்குள் ரொக்கமாக செலுத்தி உரிய இரசீது பெற்று இணைக்கப்பட வேண்டும்.

### <u>விவரம்</u>

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம் ரூ. | கூடவணித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 6. | 7. |
| 1 | அண்ணா நகர் பிரதான சாலை முதல் உட்கிரீக் கவுண்டி இணைப்பு சாலை வரை அகலப்படுத்தி தார்சாலை அமைத்தல் பணி. | 1990000 | 6800 | 19900 |
| 2 | அண்ணா நகர் பிரதான சாலையில் இரண்டு இடங்களில் சிறுபாலம் அகலப்படுத்துதல் பணி. | 280000 | 1700 | 2800 |
| 3 | உட்கிரீக் கவுண்டி 2வது பிரதான சாலை (3வது குறுக்கு தெரு முதல் 4வது குறுக்கு தெரு வரை மீதமுள்ள பகுதி) | 171000 | 700 | 1710 |
| | **மொத்தம்** | **2441000** | **9200** | **24410** |

### <u>நிபந்தனைகள்</u>

01. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000/-ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
02. ஒப்பந்ததாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு மூடி முத்திரை இடப்பட்ட உறைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
03. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழ்ங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.20/-மதிப்புள்ள அரசு முத்திரைத் தாளில் ஒப்பந்தம் செய்து தருவதுடன் மேற்படி வேலைக்கான மதிப்பீட்டின்படி 5% விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

த.பி.பா.,

04. இப்பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுவார்கள்.

05. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர் குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. வேலைகள் நடைபெறும்போது உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் கட்டிட பொருட்கள் தரம் தொடர்பாக சான்று கோரப்படும்போது பெற்றுத்தர ஒப்பந்ததாரர்கள் கட்டுப்பட்டவராவர்.

07. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால்அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (DEPOSIT) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்து வசூலிக்கப்படும்.

08. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

09. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும்போது விற்பனைவரித்துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்றினை இணைக்கப்பட வேண்டும்.

10. ஒப்பபந்தப்புள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ள காலவரைக்குள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். காலம் கடந்துவரும் ஒப்பந்தபுள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.

12. அடித்தல் திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பிணைய வைப்புத்தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும்.

13. இப்பேரூராட்சியில் ஏற்கனவே பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் பொறியியல் நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் கண்டுள்ள விவரங்கள் முறையாக பூர்த்தி செய்து அசல் செல்வநிலை சான்றிதழ்களுடன் வண்ண பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தினை ஒட்டி பதிவு செய்துகொள்ள வேண்டும்.

14. வேலை செய்ய அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்வதோ அல்லது வேறு நபருக்கு மாற்றுவதோ கூடாது. இதர நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

15. மதிப்பீட்டில் கண்டுள்ள வேலைகளை திருப்திகரமாக நல்லமுறையில்செய்யப்படவில்லையெனில் செய்த வேலைக்குத் தொகை வழ்கப்படமாட்டாது. மேலும் மதிப்பீட்டில் கண்டுள்ள அளவுக்கு சரியாக செய்யாமல் இருந்தாலோ அல்லது அப்பகுதி வாழ் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றாலும் பட்டியல் தொகை வழகப்படமாட்டாது.

16. வேலைகள் முடிவு பெற்றபின் இளநிலை உதவிப்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் அளவுகள் மேல் அளவுகள் அளவுப்புத்தகத்தில் பதிவு செய்து மேலொப்பம் வழ்கிய பின்னரே அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.

17. முடிக்கப்பட்ட வேலைகள் மதிப்பில் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வருமான வரி, மிகு வரி மற்றும் விற்பனைவரி மிகுவரி முதலியன பட்டியலில் படித்தம் செய்யப்படும்.

18. கட்டிட தொழிலாளர் நலநிதி மதிப்பீட்டுத்தொகையில் 0.30% வேலைக்கான உத்திரவு வழங்கும்போது வங்கி வரைவாக செலுத்தப்படவேண்டும்.

19. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத்தொகை தணிக்கை முடிந்து தணிக்கைஅறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும். தணிக்கை தடை ஏற்படுமாயின் குறிப்பிட்ட தொகையை தர்கள் பிற பணிகளுக்காக செலுத்திய வைப்புத்தொகையில் இருந்தும் பிடித்தம் செய்யப்படும்.
20. சிமெண்ட் பணிகளுக்கு வைப்பிரேட்டர் பயன்படுத்தபடவேண்டும்.
21. சிமெண்ட் பணிகளுக்கு நல்ல நீர் ஊற்றி கியூரிங் செய்ய வேண்டும்.
22. பணியினை செய்யும் பொழுது பணி குறித்த உயர் அலுவலர்கள் ஆய்வு செய்யப்படும்பொழுது பொறுப்பான நபரினைக்கொண்டு உரிய விவரங்கள் தெரிவிக்கப்படவேண்டும்.
23. பணியினை குறித்த காலவரைக்குள் முடிக்கப்படவேண்டும்.
24. மேலே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தரமான பொருட்கள் (சிமெண்ட், கம்பி) ஒப்பந்ததாரர்களே வாங்கி பணி செய்யவேண்டும்.

செயல் அலுவலர்
நந்தம்பாக்கம் பேரூராட்சி
சென்னை-89

பெறுநர் -

1.பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள். சான்று அஞ்சல்
நந்தம்பாக்கம் பேரூராட்சி
2.அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.

நகல் -

1. மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் மண்டலம் காஞ்சிபுரம் மாவட்ட அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2 பேரூராட்சிகள் உதவி இயக்குனர் காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்)காஞ்சிபுரம் மாவட்டம்.
4. இளநிலை பொறியாளர், நந்தம்பாக்கம் பேரூராட்சி.
5. செயல் அலுவலர்கள் மீனம்பாக்கம், குன்றத்தூர், சிட்லபாக்கம், மாங்காடு, நந்திவரம் கூடுவாஞ்சேரி, பீர்க்கன்கரணை, பெருங்களத்தூர், பள்ளிக்கரனை, பெருங்குடி மற்றும் திருநீர்மலை பேரூராட்சிகள்.
6. தலைவர் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தகவலுக்காக.